2014 ஆகஸ்ட் 5]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ராஜா அவர்கள்.

திரு. பொன். ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் தங்கள் வாயிலாக நன்றியைத் தெரிவித்து அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 333, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். இராஜி, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

333—

கலை மற்றும் அறிவியல் கல்லூரி

***20587—திரு. வி.எஸ். இராஜி:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செய்யூர் தொகுதி, செய்யூரில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

காஞ்சிபுரம் மாவட்டம், செய்யூர் தொகுதி, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். இராஜி அவர்கள்.

திரு. வி.எஸ். இராஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழியாய் போற்றும் மொழியோடு, தமிழன் வழி வழியாய் கட்டுகின்ற வேட்டியின் மாண்பினை அழியாது காத்திட்ட எங்கள் அரணே! (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தின் தலைவிதியினை மாற்றும் 110 விதி எண் 110-ன்கீழ் நிகரில்லா அறிக்கைகளைத் தந்து, தமிழக வளர்ச்சிக்கு வித்திடும்

உரமே! தமிழகத்தை முதன்மை மாநிலமாக மாற்றிடும் எங்கள் வரமே! வெள்ளாமை பெருக்க, கல்லாமை மாய்க்க, வேலை இல்லாமை தீர்க்க உண்ண நேரமில்லாத உழைப்பு, உறங்க நினையாத விழிப்பு, எல்லாம் ஏழரை கோடி தமிழருக்காகவே, தமிழகத்தின் நலத்திற்காகத் துடிக்கும் எங்கள் இதயம் புரட்சித் தலைவி அம்மா அவர்களே! (மேசையைத் தட்டும் ஒலி) கொடுக்கும் கரங்கள் இணைந்து வாரி, வாரி வழங்கி வரும் திட்டங்கள் ஏராளம் ஏராளம். புரட்சித் தலைவர் அமரர் எம்.ஜி.ஆர். அவர்கள் பாடிய

'தெருவெங்கும் பள்ளிகள் கட்டுவோம்—கல்வி
தெரியாத பேர்களே இல்லாமல் செய்வோம்
கருத்தாகப் பல தொழில் பயிலுவோம்—ஊரில்
கஞ்சிக்கில்லை என்ற சொல்லினைப் போக்குவோம்'

என்ற வைர வரிகளுக்கு இலக்கணமாக மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்றைக்கு அற்புதமான திட்டங்களைத் தந்துகொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10—20

மாண்புமிகு அம்மா அவர்களின் கனிவான கவனத்திற்கு. எனது செய்யூர் தொகுதி புதியதாக உருவாக்கப்பட்ட தொகுதி. இது விழுப்புரம் மாவட்டத்தின் கடைக்கோடியில் இருக்கின்ற தொகுதி. செய்யூர் தொகுதியில் 18—க்கும் மேற்பட்ட மேல்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. இந்த ஆண்டு இங்குள்ள செய்யூர் அரசு மேல்நிலைப் பள்ளி 97.6 சதவிகிதம் தேர்ச்சி பெற்று மாவட்டத்திலேயே முதலிடத்திலே வந்திருக்கின்றது. அங்கு இருக்கின்ற மாணவர்கள் உயர் கல்வி பயில கல்லூரிக்குச் செல்ல வேண்டும் என்று சொன்னால், அங்கிருந்து 100 கி.மீ. தூரம் கடந்து வரக்கூடிய சூழ்நிலை இருக்கின்றது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்குள்ள மாணவர்களின் நலனைக் கருத்தில்கொண்டு மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, செய்யூர் சட்டமன்றத் தொகுதியில் கலை மற்றும் அறிவியல் கல்லூரியினை அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

2014 ஆகஸ்ட் 5]

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் 697 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. காஞ்சிபுரம் மாவட்டத்தினைப் பொறுத்தவரையில், 2 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் செங்கற்பட்டு மற்றும் உத்திரமேரூரில் தலா ஒன்றும், அரசு உதவி பெறும் கல்லூரிகளைப் பொறுத்தவரையில், 8 கல்லூரிகளும், சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் 29-ம், பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரி ஒன்றும் என ஆக மொத்தம் 40 கல்லூரிகள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2 ஆண்டுகளுக்கு முன்பு உத்திரமேரூரில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஒன்றினை துவக்கி வைத்தார்கள். நெம்மேலியில் ஒரு பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரியினைத் துவக்கி வைத்திருக்கிறார்கள். ஆகவே, அந்த மாவட்டத்தினைப் பொறுத்தவரையில், இன்றைக்கு கோயம்புத்தூருக்கு அடுத்ததாக காஞ்சிபுரம் மாவட்டத்தில் அதிகமான கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதை இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கின்ற பகுதி, மிகவும் தொலைவில் இருக்கின்ற பகுதி. அதுமட்டுமல்ல, அங்கே உள்ள மேல்நிலைப் பள்ளி மாணவர்கள் நன்றாகப் படித்து அதிக அளவில் தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள். எனவே, அந்தத் தொகுதிக்கு ஒரு கல்லூரி வேண்டும் என்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, எதிர்காலத்தில் நிதிநிலைக்கேற்ப ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். இராஜி அவர்கள்.

திரு. வி.எஸ். இராஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்ன மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு

புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் என் சார்பாகவும், எனது தொகுதி மக்களின் சார்பாகவும் நன்றி சொல்லி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார் அவர்கள்.*

திரு. வி.சி. சந்திரகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோட்டில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி இல்லை. தற்போது உள்ள சிக்கய்யநாயக்கர் கல்லூரி அரசு உதவிபெறும் கல்லூரியாக இருக்கின்றது. கடந்த 30 நாட்களாக அந்தக் கல்லூரியையே அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியாக அறிவிக்க வேண்டும் என்று மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தக் கல்லூரியை அரசுக் கல்லூரியாக அறிவிப்பார்களா அல்லது ஈரோட்டிற்கு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியினை புதியதாக உருவாக்கித் தருவதற்கு முயற்சி எடுப்பார்களா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதைப்போல தமிழ்நாட்டில் 697 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் இருக்கின்றன. அரசு கல்லூரிகளைப் பொறுத்தவரையில், 75 கல்லூரிகள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. அந்தவகையில் பார்த்தால், ஈரோடு மாவட்டம், தேனி மாவட்டம், கன்னியாகுமரி மாவட்டம் ஆகிய 3 மாவட்டங்களில் அரசு கல்லூரிகள் இல்லை என்பது உண்மைதான். இருந்தாலும் மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் இந்நிலையைப் போக்குகின்ற வகையில் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரியைத் துவங்க வேண்டும் என்ற நோக்கத்தோடுதான், கன்னியாகுமரி மாவட்டத்திற்கு சென்ற ஆண்டு ஒரு பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரியினைத் தந்திருக்கிறார்கள். மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சிக்கய்யநாயக்கர் அரசு உதவிபெறும் கல்லூரியை அரசுக் கல்லூரியாக மாற்றித்தர வேண்டும் என்ற கோரிக்கையினை வைத்துள்ளார்கள். ஏற்கெனவே, இந்திய வரலாற்றில் இல்லாத அளவிற்கு, தனியார் பல்கலைக்கழகமான அண்ணாமலைப்*

2014 ஆகஸ்ட் 5]

பல்கலைக்கழகத்தினைத் தத்தெடுத்து அரசுடைமையாக்கிய பெருமை மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களையே சாரும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவில் அதுபோல பல பல்கலைக்கழகங்கள் இருந்தாலும்கூட, அரசு நிதிபெறும் பல்கலைக்கழகத்தை, மாணவர் நலன் கருதி, மாணவர்கள் இட ஒதுக்கீடு முறையில் சேர்க்கப்பட வேண்டும்; அதோடுமட்டுமல்லாமல் அங்கு பணியாற்றக்கூடிய பேராசிரியர்களுக்கு எந்தவிதமான பிரச்சினைகளும் இருக்கக்கூடாது, மாணவர்களும் பாதிக்கப்படக்கூடாது என்ற நோக்கத்திற்காக, பல்வேறு வகைகளில் தவறு நடந்திருந்ததையெல்லாம் சரிசெய்து, மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் அதனை அரசுடைமையாக்கியதை மக்களும், மாணவர்களும் பெருமையோடு சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இதுபோன்ற அரசு உதவிபெறும் கல்லூரியை, அரசுக் கல்லூரியாக மாற்ற வேண்டும் என்று சொன்னால், கொள்கை முடிவு எடுக்கப்பட வேண்டும். இதனை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, இதுகுறித்து எதிர்காலத்தில் அரசு சிந்தித்து முடிவெடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.

திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூரில், ஏறக்குறைய 10—க்கும் மேற்பட்ட மேல்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. ஆனால், திருவள்ளூரில் இதுவரை அரசு கலைக் கல்லூரியோ, பொறியியல் கல்லூரியோ கிடையாது. அங்கிருக்கக்கூடிய மாணவர்கள் கல்லூரிக்குச் செல்ல வேண்டுமென்றால், திருத்தணிக்குச் செல்ல வேண்டும் அல்லது பொன்னேரிக்குச் செல்ல வேண்டும். ஆகவே, மாவட்டத் தலைநகரான திருவள்ளூரில் அரசு கலைக் கல்லூரியோ, உறுப்புக் கல்லூரியோ ஏதாவது ஒன்றைத் தொடங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதுநாள் வரை அரூரில் மட்டுமே இருந்தார். இப்போது திருவள்ளூருக்கு சென்று கொண்டிருக்கிறார். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளூர் மாவட்டத்தில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி இல்லையென்ற கருத்தைச் சொல்லியிருக்கிறார். அது தவறு. திருவள்ளூர் மாவட்டத்தில் 2 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் இருக்கின்றன. ஒரு பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரி இருக்கிறது. அந்த மாவட்டத்திலே மொத்தம் 31 கல்லூரிகள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மாவட்டத்தினுடைய தலைநகர் பகுதியிலே கல்லூரி வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள்.*

மாவட்டத் தலைநகரிலே நிலத்தைக் கையகப்படுத்த வேண்டுமென்று சொன்னால், அதிலே பல்வேறுபட்ட சிரமங்கள் இருக்கின்றன. மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் இதுபோன்ற சிரமங்கள் எதிர்காலத்தில் இருக்கக்கூடாது என்பதற்காக, ஏற்கெனவே மாநகராட்சிப் பகுதியாக இருந்தால் 3 ஏக்கர் நிலம் வேண்டுமென்று அரசு விதி இருந்ததைக்கூட இன்றைக்கு மாற்றி, மாநகராட்சிப் பகுதியாக இருந்தால், 2 ஏக்கர் நிலம் மட்டும் இருந்தால் போதும் என்று மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். கிராமப் பகுதியைப் பொறுத்தவரையில், 10 ஏக்கர் நிலம் வேண்டுமென்ற விதி இருந்தது; 5 ஏக்கர் இருந்தால் போதும் என்று மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் ஆணை வழங்கியிருக்கிறார்கள். அதோடு நகராட்சிப் பகுதியாக இருந்தால் 4 ஏக்கர் நிலம் வேண்டுமென்று விதி இருந்தது. அந்த 3 ஏக்கர் நிலம் இருந்தால் போதும் என்று மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். தற்போது மாநகராட்சிப் பகுதிகளிலே கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் அதிகமான மாணவர்கள் சேர்ந்து படிக்கக்கூடிய ஆர்வம் இருக்கின்ற காரணத்தால், நிலம் கையகப்படுத்துவதிலே சிரமம் இருக்கக்கூடாது என்பதற்காகத்தான் 2 ஏக்கர் நிலம் இருந்தால் போதும் என்று மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். எதிர்காலத்திலே இதுபோன்ற கோரிக்கை அந்தப் பகுதியிலேயிருந்து வரும்பட்சத்தில் அரசு ஆராய்ந்து நிதிநிலைக்கேற்ப நடவடிக்கை

2014 ஆகஸ்ட் 5]

எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள்.*

திரு. அ. அஸ்லம் பாஷா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம்பூர் தொகுதிக்குட்பட்ட, மாதனூர் ஒன்றியம், பேரணாம்பட்டு ஒன்றியம், ஆலங்காயம் ஒன்றியம், ஆம்பூர் நகரம் பக்கத்தில் இருக்கக்கூடிய அணைக்கட்டு ஒன்றியம் ஆகிய பகுதிகளிலே இருக்கக்கூடிய மாணவ, மாணவிகள் பயன்பெறக்கூடிய வகையிலே, ஆம்பூர் தொகுதியிலே அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்கப்படுமா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன். மேலும், கல்லூரி தொடங்குவதற்கான இடம் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறார்கள். அரசு இடமும்கூட இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கல்லூரி தொடங்குவதற்கு ஆவன செய்வார்களா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஆம்பூர் நகரப் பகுதியில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒரு புள்ளிவிவரத்தை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். கல்லூரிகளைப் பொறுத்தவரையில், இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் அதிக எண்ணிக்கையில் கல்லூரிகள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. பொறியியல் கல்லூரிகள் 572 இருக்கின்றன. கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் 697 இருக்கின்றன. தொழில்நுட்பக் கல்லூரிகள், அதாவது பாலிடெக்னிக் கல்லூரிகள் 501 இருக்கின்றன. கல்வியியல் கல்லூரிகள் 672 இருக்கின்றன. இப்போது* Union Territory *உட்பட 32 மாநிலங்களையும் எடுத்துக்கொண்டால், அதிக எண்ணிக்கையில் கல்லூரிகளைக்கொண்ட மாநிலம் தமிழ்நாடு என்பதை இங்கே பெருமையோடு எடுத்துச்சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

கல்லூரிகளைப் பொறுத்தவரையில், 2,442 கல்லூரிகள், இந்தியாவிலேயே அதிகமாக தமிழ்நாட்டில்தான் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதைப் பெருமையோடு சொல்லிக் கொள்கிறேன். இதுவரையில் எந்த அரசாங்கமும் செய்யாத அளவிற்கு ஒட்டுமொத்தமாக இரண்டே ஆண்டுகளில் அதிகமான அரசுக் கல்லூரிகளைத் தொடங்கியது மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள்தான் என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். இந்த வருடம்கூட மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் மயிலாடுதுறையில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியைத் தொடங்கியிருக்கிறார்கள். ஆட்சி அமைந்த இரண்டே ஆண்டுகளில் 53 கல்லூரிகளைத் தந்து, தமிழகத்தில் அதிகமான மாணவர்கள் உயர் கல்வியில் சேர்ந்து படிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு இதுபோன்ற திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள்.

நகரப் பகுதியில் கல்லூரி வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் கேட்டிருக்கிறார். நிலம் கையகப்படுத்துகின்ற பணி முடிவு பெற்றால், அரசினுடைய கருத்தையும் ஏற்று, மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச்சென்று, எதிர்காலத்தில் அரசு சிந்தித்து நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 334, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. தினகரன், மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

334—

முழுநேர நியாய விலைக் கடை

***32633—திரு. க. தினகரன்:**

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சூலூர் தொகுதி, சுல்தான்பேட்டை ஊராட்சி ஒன்றியம், அப்பநாயக்கன்பட்டிபுதூரில் முழுநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?